**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO.119/2024**

**PW. 1**

**Date: 01.07.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. நாராயணன் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | வேங்கடாசாரி | மதம் | |
| கிராமம் | மாம்பாக்கம் | தொழில் | |
| வட்டம் | திருப்போரூர் | வயது | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **01st July 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜரில்லை. கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். பிரிவு 355 பா.நா.சு.ச கீழ் தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்படுகிறது.

**<u>முதல் விசாரணை;</u>**

1. நான் இத்தனி நபர் புகாரின் புகார்தாரர். பிரமாண பத்திரம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி எனது தரப்பு வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். எதிரிக்கு எனது காரை வாடகைக்கு கொடுத்த வகையில் எதிரி எனக்கு 36 மாதங்களுக்கு வாடகை பணம் மாதம் ரூ. 20,000/- என்ற வகையில் கொடுக்க வேண்டி இருந்தது. அதன் பின் காரை அவரே எடுத்து கொள்வதாக சொல்லி ஒரு ஒப்பந்தம் செய்து அதற்காக ரூ. 10 லட்சத்திற்கு

அவர் கணக்கு வைத்துள்ள குரோம்பேட்டை பந்தன் வங்கியில் 03/04/2024 தேதியிட்ட காசோலை எண். 000009 என்ற ரூ.10 லட்சத்திற்கான காசோலை கொடுத்தார். **(03/04/2024 தேதியிட்ட காசோலை பு.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. அந்த காசோலையை நான் கணக்கு வைத்துள்ள மாம்பாக்கம் பாரத வங்கியில் கடந்த 03.04.2024 அன்று வசூலுக்காக தாக்கல் செய்தேன். ஆனால் அந்த காசோலை 04.04.2024 அன்று போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டது. **(04.04.2024 தேதியிட்ட திருப்புதல் குறிப்பாணை பு.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரியின் வேண்டுகோளின் பேரில் மீணடும் 04.05.2024 அன்று எனது வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்தேன். ஆனால் அந்த காசோலை 06/05/2024 அன்று போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டது. **(06/05/2024 தேதியிட்ட திருப்புதல் குறிப்பாணை பு.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனவே நான் காசோலை திருப்பப்பட்டது சம்பந்தமாக எதிரிக்கு 21/05/2024 அன்று காசோலை தொகையை திருப்பி அளிக்கக் கோரியும், காசோலை திருப்பப்பட்டதற்கான உரிய காரணத்தை தெரிவிக்கக் கோரியும் எனது வழக்கறிஞர் மூலமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். **(21.05.2025 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பு.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. அந்த வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டும், காசோலையை தொகையையோ, உரிய பதில் அறிவிப்பையோ கொடுக்கவில்லை. **(எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை பு.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனவே எனக்கு காசோலை அளித்து நம்பகம் தெரிவித்து

ஏமாற்றிய எதிரியை மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் கீழ் தண்டித்து காசோலை தொகையை இழப்பீடாக பெற்றுத்தரும்படி பிராத்திக்கிறேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

S/d- K.Nilavarasan, 01.07.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.